# 123
# இந்தியாவே ஓடாதே! நில்!!

வழக்கறிஞர் கே.எஸ்.இராதாகிருஷ்ணன்

# கே.எஸ்.ஆரின்
# காண்டீபம்
# ஏவும் கணை

கரிசல் மண்ணின் சிந்தனைச் சுரங்கமாம் உயிரினிய சகோதரர் வழக்கறிஞர் கே.எஸ்.இராதாகிருஷ்ணன் அவர்கள், நம் தாயகமாம் தமிழகத்தின் வருங்கால சந்ததிகளின் நலன் காக்கும் உரிமைப் போராளி ஆவார். இந்தியத் துணைக்கண்டத்தின் ஜனநாயகம் காக்கப்பட வேண்டும் எனும் வேட்கை, தணலாக அவர் நெஞ்சில் கனன்று கொண்டு இருப்பதன் விளைவுதான் அவர் படைக்கும் நூல்கள், தொடுக்கும் பொதுநல வழக்குகள், எடுக்கும் மேலோர் விழாக்கள்.

எட்டயபுரத்து எரிமலைக் கவிஞனை, 'கரிசல் காட்டின் கவிதைச்சோலை'யாக, பொருநைக்கரைப் பெருமையை 'நிமிர வைக்கும் நெல்லையாக', தமிழரின் பல்லாண்டுக் கனவை 'சேதுக்கால்வாய் ஆய்வாக', கி.ரா. எனும் ஈரெழுத்தை 'இலக்கிய வானமாக', தன் எண்ணத்தூரிகையால் காலத்திரையில் அழியா ஓவியம் ஆக்குகிறார்.

அவரது காண்டீபம் ஏவும் கூர்மையான கணைதான். 123 இந்தியாவே ஓடாதே! நில்!! எனும் இந்நூல். இந்தியாவின் எதிர்காலத்தைப் பாழ்படுத்தும் நாச வலைதான், அமெரிக்க-இந்திய அணு ஒப்பந்தம் எனும் பேருண்மையை, ஐயந்திரிபற விளக்குகிறார். அமெரிக்க ஏகாதிபத்தியக் கழுகின் பிடியில், வலியப்போய்ச் சிக்கிக்கொள்ள ஏன் ஓடுகிறாய்? என ஆணித்தரமான வாதங்களை, ஆளும் துரைத்தனத்தின் மீது பாணங்களாகத் தொடுக்கிறார்; ஓடாதே நில் என எச்சரிக்கை விடுக்கிறார்.

அணு ஆயுத வல்லரசாம் அமெரிக்காவின், 'மூன்று கல் தீவு' என்ற அணு உலை, 200 கோடி டாலர் செலவில் மூடப்பட்டும், கதிர் இயக்கக் கசிவால் அங்கே விளையும் தீங்கினை, ஃபிரெஞ்சு நாட்டின் அணுமின் உலைகள் ஏற்படுத்தும் நாசத்தைத் தடுக்கத் திணறும் நிலைமையைச் சுட்டிக்காட்டும் இவர், எரிநகரத்தை நாம் ஏன் வலிய வரவழைத்துத் தலையில் சுமக்க வேண்டும்? எனும் சிந்தனைக்குக் கூர் தீட்டுகிறார் இந்நூலில்.

இலட்சக்கணக்கான ஈராக் மக்களின் உயிர்களைப் பலிகொண்ட அமெரிக்க ஏகாதிபத்தியத்தின், நாசகார 'நிமிட்ஸ்' கப்பல், சென்னைக் கடல் அருகில் நங்கூரம் இட்டதும் அந்த அமெரிக்க இராணுவத் தோடு மேற்கொண்ட இந்தியாவின் கூட்டுப் பயிற்சியும், பண்டித நேரு வகுத்த அணிசேராக் கொள்கையை ஆயிரம் அடி குழிதோண்டிப் புதைத்த அக்கிரமத்தை, ஆவேச வேதனையுடன் விளக்குகிறார். அணு மின்சாரம், அணு ஆயுதம், அணு உலைகள் குறித்த அறிவியல் விளக்கங்களை இந்நூலில் காணலாம்.

மறுகாலனியாதிக்கம் எனும் படுகுழியில் இந்தியாவை வீழ்த்தும் சதித்திட்டமே 123. இந்த ஒப்பந்தம் இந்தியாவுக்கு விலங்கு பூட்டுகிறது. அணு ஆயுத சோதனை நடத்தத் தடை விதிக்கிறது. அப்படி நடத்தினால் ஒப்பந்தம் காலாவதியாகும் என ஹைஹைடு சட்டம் சொல்லுகிறது. அதனால்தான், அமெரிக்க நாடாளுமன்றத்தில் ஹைடு சட்டம் நிறைவேற்றப்பட்டபோது, இந்தியாவின் மூத்த அணு விஞ்ஞானிகள், இதனால் இந்தியாவுக்கு ஏற்படும் கேடுகளைச் சுட்டிக்காட்டினர்.

விஸ்வரூபம் எடுத்து உள்ள அமெரிக்க-இந்திய அணு ஆயுத ஒப்பந்தப் பிரச்சனை குறித்து, தனது உரத்த சிந்தனைகளை, மக்கள் மன்றத்தில் உலவ விடுகிறார் இந்த அரிய நூலாக.

நாட்டின் நலன் காக்கவும், சூழ்ந்து வரும் ஆபத்துகளைத் தடுப்பதற்கு அபாய அறிவிப்பாக எச்சரிக்கை செய்யவும் இந்த ஆயுத நூல், உறுதியாகப் பயன் தரும். அவரது சிந்தனை அருவியால் தமிழ் நிலம் தழைக்கட்டும். இந்திய ஜனநாயகம் செழிக்கட்டும். வளரட்டும் அவரது எழுத்துப்பணி.

வைகோ

தாயகம்,
சென்னை-8

(வைகோ),
பொதுச் செயலாளர்,
மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம்



கே.எஸ்.இராதாகிருஷ்ணன் கரிசல் மண்ணான கோவில்பட்டி அருகிலுள்ள குருஞ்சாக்குளம் கிராமத்தில் விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞர். அரசியலில் தன் தடத்தைப் பதித்து வருகிறார். மறுமலர்ச்சி தி.மு.க.வின் முக்கிய தளகர்த்தர்களில் ஒருவர்.

மனித உரிமைகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, நதிகள் இணைப்பு - தேசியமயமாக்கப்படல், விவசாயிகள் பிரச்சினை போன்றவற்றிற்காக பல்வேறு பொதுநல வழக்குகளை உச்சநீதிமன்றத்திலும், உயர்நீதிமன்றத்திலும் தொடர்ந்துள்ளார். Amnesty International இயக்கத்திலும் இணைந்து பணியாற்றி வருகிறார். பல்வேறு அரசியல் போராட்டங்களிலும் கலந்துகொண்டு சிறை சென்றுள்ளார். மத்திய அரசின் இரயில்வே அமைச்சகம், தொழிலாளர் அமைச்சகத்தின் குழந்தை தொழிலாளர் ஆலோசனைக்குழு போன்ற பல்வேறு மத்திய அமைச்சகங்களின் ஆலோசனைக் குழுவில் பணியாற்றியவர். திரைப்பட தணிக்கை குழு உறுப்பினராக மத்திய அரசால் பலமுறை நியமிக்கப்பட்டுள்ளார். கொச்சி துறைமுகக் கழகத்தின் நடுவராகப் பணியாற்றினார்.

இந்திய சட்ட மையத்தின் உறுப்பினராகவும், இந்திய வழக்கறிஞர் சங்கத்தின் தமிழ்நாடு பிரிவில் இணை செயலாளராகவும் பொறுப்பேற்றுப் பணியாற்றுகிறார்.

'உரிமைக்குக் குரல் கொடுப்போம்', 'மனித உரிமைச் சட்டங்களும் சில குறிப்புகளும்', நிமிர வைக்கும் நெல்லை', 'சேதுக்கால்வாய் ஒரு பார்வை', 'கரிசல் காட்டின் கவிதைச் சோலை பாரதி', 'தமிழ்நாடு-50' போன்ற நூல்களையும் எழுதியுள்ளார். தமிழக அரசின் சார்புள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் போன்ற அமைப்புகளுக்கு அரசு வழக்கறிஞராக இருந்துள்ளார். கதைசொல்லி இணையாசிரியர், பொதிகை-பொருநை-கரிசல் கட்டளை அமைப்பின் நிறுவனர்.

பொதிகை-பொருநை-கரிசல்